# இலக்கியங்களில் முருக வழிபாடு

# Human Lifestyle Revealing by *Acharakkovai*

***லட்சுமி***
உதவிப்பேராசிரியர்
இரத்தினம் கலை அறிவியல் கல்லூரி, கோவை,
இந்தியா

**Lakshmi**
*Assistant Professor*
*Rathinam College Of Arts And Science*
*Coimbatore, India*

## *ஆய்வுச் சுருக்கம்*

*ஆசாரக்கோவை பதினெண்கீழ் கணக்கு நூல்களில் ஒன்றாக விளங்குகின்றது. மனித வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளை பற்றியும் உலக பொதுமறை என போற்றப்படுகின்ற திருக்குறளை பற்றிய செய்திகளை ஆராய்வது கட்டுரையாக அமைகின்றது.*

## Abstract

*Acharakkovai is considered one of the eighteen treatises in Tamil literature. It serves as an essay exploring the ethical principles to be followed in human life and provides insights into the revered Thirukkural.*

**Citation**

Lakshmi. “Human Lifestyle Revealing by *Acharakkovai*” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 83-86.

*இல்வாழ்க்கை மனிதர்களுடைய இல்வாழ்க்கை என்பது கணவன் மனைவி இருவரும் தான் பெற்ற மக்களுடன் ஒன்றாக கூடிய இணைந்து வாழும் வாழ்க்கையே இல்வாழ்க்கை எனப்படும்.*

*இல்லறத்தில் வாழ்பவர்கள் அறத்தின் வழியே நல்வழியில் நடத்துபவர் ஆவர். ஒரு மனிதன் மன நிறைவுக்கு மிக முக்கியமான ஒன்றாக இல்வாழ்க்கை அமைகின்றது.*

***"யாப்பி நீரேந்துப் தெளித்துச் சிறுகதை***
***நீர்ச்சால் கரி நிறைய மலரணி" (ஆ. கோ :- 46 )***

*என்ற வரிகளால் உணர்த்துகிறது.*

*ஒரு இல்லத்தரசி என்பவள் முன்னே எழுந்து தன் குடும்பத்துக்கு தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் தற்போதைய காலகட்டத்தில் அனைத்து நிகழ்வது இல்லை.நாகரீக வளர்ச்சி காரணமாக அனைத்து மாறிவிட்டனர். ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி இருவருமே பணியில் அமர்ந்திருப்பதால் தற்காலத்தில் கூறியபடி இல்வாழ்க்கை இருப்பது என்பது சத்தியமற்ற ஒன்றாகும்.*

**ஒழுக்கம்**

*ஒழுக்கம் என்பது அனைத்து வகையான மனித செயல்களுக்கு அடிப்படையாக உள்ளது. ஒருவர் ஒழுக்கத்தில் சிறந்திருந்தால் அவர் வாழ்கையில் நல்ல நிலையினை அடைந்து சிறப்பு பெறுவர்.*

***"ஒழுக்கத்தைஏய்துவர்மேன்மைஇழுக்கத்தை***
***ஏய்துவர்எய்தாபழி" (குறள்: 37)***

*என்ற குறள் விளக்குகின்றது.*

*ஒழுக்கம் என்பது நம்மை யாரும் கவனிக்காத நேரங்களில் கூட நாம் நமக்குரிய ஒழுக்க நெறியில் இருந்து மாறக் கூடாது. தன் ஒழுக்கநெறிகளில் இருந்து தவறுபவர் இந்த சமுதாயத்தில் வயல்களில் விளைந்த தேவையற்ற செடிகள் என்று உண்மையாகவும் கூறப்படுகிறது. ஒழுக்கம் என்பது தனிநபர் தொடர்புடையது அல்ல. ஒரு தனிநபர் தொடர்பு உடையது அல்ல. ஒரு தனிநபர் ஒழுகக்கமாக இருந்தால் அவரும் அவரது குடும்பமும் ஒழுக்கம் நிறைந்ததாக காணப்படும். ஒரு தனி நபரின் குடும்பம் என்பது சமுதாயத்தின் ஒரு அங்கமாக திகழ்கின்றது என்று கூறப்பட்டுள்ளது.*

***பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு***
***நிலக்கிழமை மீக்கூற்றங் கல்விநோயின்மை (ஆ .சா : 2)***

**பெரியோரை பேணல்**

*பெரியோரின் நலத்தில் பேணுவது இன்றே அல்லது நேற்றோ கடைபிடிக்கின்ற செயல் இல்லை காலம் காலமாக நம் கடைபிடிக்கின்ற பண்பாட்டின் எச்சமாக உள்ளது. ஆனால் தற்போதைய காலகட்டத்தில் அவைகள் மிகவும் சவாலான ஒன்றாகவே உள்ளது. அக்காலத்தில் பெரியோர்களை மதித்து போற்றி வந்தனர். பெரியோருக்கு செய்யப்படும் அனைத்து பணிவிடைகளும் கடவுளுக்கு செய்யும் பணிவிடைகளை விட மேலான ஒன்றாகும். நம்மை இந்த உலகிற்கு அறிமுகம் படுத்தியவர்களே நாம் பெற்றோர்கள் தான் அவர்களை காப்பது என்பது கடமையல்ல அவைகள் வரம் என்று கருதப்படுகின்றது.*

*தற்காலத்தில் நம்மை பெற்றவர்கள் நாம் பெற்ற செல்வத்தை உடன் இருந்து அவர்களுக்கு தேவையான ஞானத்தையும், ஒழுக்கத்தையும் கற்றுத்தந்தனர். அன்பு,*

*அரவணைப்பு, பாரம்பரியம் , ஒழுக்கம், பரம்பரை போன்ற நிகழ்வுகளை நாம் பெற்ற குழந்தைகளுக்கு கற்று கொடுத்தனர். சிறு வயதில் ஒரு செயலை பாதித்தால் அவை எளிதில் மறக்க இயலாது.*

***"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்"***

*என்ற பழமொழி விளக்குகின்றது.*

*நம் சிறுவயதில் செய்கின்ற பழக்க வழக்கங்கள் அனைத்துமே நாம் பாடையில் செல்லும் வரை நம்மை பின் தொடர்வதை போல நாம் சிறுவயதில் குழந்தைகளுக்கு கற்று தருகின்ற அனைத்து செயல்களும் அவர்களுக்கு எதிர்காலத்தில் பயன் அளிக்க கூடிய வகையில் இருத்தல் வேண்டும்.*

*ஆனால் தற்போதைய காலகட்டத்தில் இவைகள் அனைத்துமே சாத்தியமற்ற ஒன்றாக திகழ்கின்றது. நாம் முன்னோர்கள் காலத்தில் பெரியோர்கள் தங்களுடனே இருந்தனர். இவர்கள் அக்காலத்து கண்காணிப்பு (*CCTV*) என்றும் கூறப்பட்டுள்ளது. நல்லது கெட்டது அனைத்துமே அவர்கள் போதித்து வந்தனர்.*

*நாம் அனைவரும் தற்போதைய காலகட்டத்தில் நிலையில் முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டு நம் பாரம்பரிய பெட்டகத்தை இழந்த நிலையில் உள்ளோம்.* Old is gold *என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். தங்கத்தை கூட வாங்கி விட இயலும் ஆனால் நம் முன்னோர்களை? நாம் பண்பாட்டில் எச்சமாக விளங்குகின்றது. நாம் பெற்றோர்களை பேணுவது நாம் கடமையாக கருதப்படுகின்றது.*

**அறிவுடைமை**

*உலகில் உள்ள செல்வங்களில் அறிவு செல்வமே சிறந்த செல்வமாக கருதப்படுகின்றது. அறிவு என்பது அனைத்து மனிதர்களுக்கும் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது.*

*அறிவு இல்லாதவர் என்ன செய்வதென்று தெரியாமல் தமக்கு தாமே துன்பத்தை ஏற்படுத்தி கொள்வார். அத்துடன் அத்துன்பத்தில் இருந்து வெளிவர தெரியாமல் தவித்து கொண்டு இருப்பார்.*

***"சென்ற இடத்தால் செலவிடா தீஒரீஇ***
***நன்றின்பால் உய்ப்பது அறிவு" (குறள் : 422)***

*மனதினை கட்டுபடுத்தி வாழ கற்றுக்கொள்ள வேண்டும். தீமைகளில் இருந்து விலக்கி, நன்மையில் செல்ல விடுவதே அறிவாகும். அறிவுடையவார்கள் தனக்கு பின்வருகின்ற துன்பத்தை முன்னது அறிந்து அவற்றில் இருந்து தன்னை காத்துக்கொள்வார்.*

***"அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்***
***அஃதறிகல்லா தவர்" (குறள் : 427)***

*அறிவினார் தமக்கு மதிப்பு இருக்கும் இடத்தில் மட்டுமே இருக்க விரும்புவார். அறிவடையவார் கள்ளாற் களித்தாடுமிடத்தும், பபத்தஜயர் சேரி போர்க்களம் போன்ற இடங்களை அறிவினார் விரும்பாத இடங்கள்*

***குணநோக்கி கொண்டவார் கேள்விட் டுழியு***
***நிகரில் வினவினார் வேண்டாம் பலர்தொகு (ஆசார : 55)***

**முடிவுரை**

*நிரந்திரமில்லாத இந்த உலகில் நாம் வாழும் பொழுதே சொர்க்கத்தை காட்ட கூடிய இல்வாழ்க்கை ஒழுக்கம் பெரியோரை பேணல், அறிவுடைமை போன்றவை மானிட*

*வாழ்வியலை வெளிப்படுத்தும் கருவியாக விளங்குகின்றது. ஆனால் நம் அனைவரும் நிரந்திரமற்றதை தேடி அலைகின்றனர். நாம் சங்க இலக்கிய நூல்களில் ஒன்றாக விளங்குகின்ற நூல்கள் மனித வாழ்க்கையை நெறிபடுத்தி வெளிப்படுத்தும் நூல்களாக கருதப்படுகின்றது.*